Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ மதே ராமானுஜாய நமஹ

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

ஸ்ரீ ராமானுஜ நமஹ

அவதாரம்

ஸ்ரீபெரும்பூதூர் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில் சாலிவாஹன சகாப்தம் 940-வது பிங்கள வருஷம் திருவாதிரை நட்சத்திரத்தில் வியாழக்கிழமையன்று நடுப்பகலில் கடக லக்கினத்தில் ஹாரீத கோத்ரத்தில் சர்வக்ரது ஆகுல கேசவ சோமயாஜிக்கும் காந்திமதி என்ற பிராட்டியாருக்கும் திருமகனாய், அனந்தனுடைய அம்சமாக ஸ்ரீ இராமானுஜர் அவதாரம் செய்தார்.

ஒளி விளக்காகிய வைணவ ஜோதி :

வைஷ்ணவ சம்பிரதாயத்தில் தோன்றி அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.மேலும் விசிஷ்டாத்வைதம் எனும் புதிய கோட்பாடுகளை அளித்தவர் ஸ்ரீ இராமானுஜர்ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உலக சமாதானம், சமய சீர்த்திருத்தம், சமுதாய அமைப்பு, அறிவியல், நகர நிர்மானம், அரசனாக இருப்பதற்கான விதிமுறைகள் என்ற பல முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருந்தார். உயர்த்தோர் தாழ்ந்தோர் என்ற

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பேதத்தினைப் போக்கி "அனைவரும் ஆண்டவன் முன்பு சமமே" என்ற புரட்சித் சிந்தனையை அன்றே ஏற்படுத்தியவர் ஸ்ரீ இராமானுஜர்

இராமாவதாரத்தில் இலக்குவனகாவும், கிருஷ்ணவதாரத்தில் பலராமனாகவும் அவதரித்த ஆதிஷேஷனே இக்கலியுகத்தில் ஸ்ரீ இராமானுஜராக அவதரித்தார் என்பது புராணர்கள் கூறும் செய்தியாகும்.

இராமானுஜரின் கொள்கைகள் :-

சமயம், சமுதாயம், சம்பிரதாயம் ஆகியவைகளை ஒழுங்காக நிலை நாட்ட வேண்டி பல எதிர்ப்புகளை அவர் எதிர்கொண்டு வென்றார். நாட்டின் பல பாகங்களுக்கு சென்று வாதிட்டார். "கோயில்ஒழுகு" என்ற இலக்கணத்தை வகுத்து கோயில்களில் வழிபாட்டு முற இப்படித்தான் நடத்தப்பட வேண்டும் என ஏற்பாடு செய்தார்.

கோயில்களில் தமிழ் வேதமாம் திவ்யப் பிரபந்த பாசுரங்களை ஒலிக்கச் செய்தார். முக்கியமாக

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆழ்வார்களின் பாசுரங்கள் அவற்றில் இடம்பெற வேண்டும் என நிர்ணயித்தார்.

ஸ்ரீ இராமானுஜர் வட மொழியில் ஒன்பது க்ரந்தங்கள் எழுதியுள்ளார். அதில் ஸ்ரீ "பாஷ்யம்" எனும் நூல் மிகவும் புகழ் வாய்ந்த நூலாகும். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதே இவரது விசிஷ்டாவைத்தின் சாராம்சமாகும். வைணவம் என்பது ஒரு மதம் மட்டுமல்ல, அது ஒரு வாழ்க்கை நெறி, எல்லோரிடமும் அன்பு செலுத்துதல், அவரவர் தம் கடமைகளை ஒழுங்காகச் செய்தல் ஸ்ரீ மந்நாராயணனை பரிபூரணமாக சரணடைதல், மனித நேயத்தை வளர்த்தல் ஆகியவை யாவும் ஸ்ரீ இராமானுஜரின் கொள்கைகளாகும்.

புகழும் பெருமையும் உடைய வைணவ மகானை மேலும் பெருமைப்படுத்தும் பொருட்டு ஸ்ரீரங்கத்தில் பங்குனி மாதம் அஸத நட்சத்திரத்தில் பிறந்த திருவரங்கத்தமுதனார் இராமானுச நூற்றந்தாதி யென்ற நூலைச் செய்து, உடையவர், கூத்தாழ்வான் முதலான ஆசார்யர்கள் பெரியதிரளாக இருந்தபொழுதே அந்நூலைத்தனே

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

வெளியிட்டருளினார்.

இந்நூல் இராமானுசனடியார்க்கு, அந்தணர்க்கு காயத்திரி போன்று, எப்போதும் பேண வேண்டியது பற்றி பிரபந்த காயத்திரி என்று வழங்கலாயிற்று. இந்நூல் ஆழ்வார்களினருளிச் செயல்களோடொப்ப திருக்கோயில்களில் ஸேவிக்கப்படுகின்றது.

காஞ்சிபுரத்தில் புரட்டாசித் திருவோணத் திருநாளில் அவதரித்த ஸ்வாமி தேசிகன் பல க்ரந்தங்கள் அருளிச் செய்திருந்தாலும், தன்னுடைய அபரிமிதமான பக்திக்கு இருப்பிடமானவருமான ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸ்துதி செய்யும் பொருட்டு எழுபத்தி நான்கு ஸ்தோத்ரங்களைக் கொண்ட "ஸ்ரீ யதிராஜ ஸப்ததி" என்ற க்ரந்தத்தினை இயற்றி ஸ்ரீ இராமானுஜரின் பெருமையை மேலும் உய்யச் செய்தார்.

இவ்வாறாக பல ஆசார்யார்கள், பலவாறாக இராமனுஜரின் புகழினை மேன்மையடையச் செயதுள்ளனர். அவற்றில் பிரபந்த காயத்திரியாகிய

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

"ஸ்ரீ இராமானுச நூற்றந்தாதி மற்றும் ஸ்வாமி தேசிகனின்" ஸ்ரீ யதிராஜ ஸப்ததியை அனுதினமும் பாராயணம் செய்து ஸ்ரீ பாஷ்யகாரரின் அருளினைப் பெறுவோமாக.

இராமனுச நூற்றந்தாதி

தனியன்கள்

முன்னைவினையகல மூங்கிற்குடியமுதன்
பொன்னங்கழற்கமலப்போதிரண்டும் என்னுடைய
சென்னிக்கணியாகச்சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக்கடவுடையேன்யான்.

நயந்தருபேரின் பமெல்லாம்பழுதென் றுநண்ணினர்பால்
சயந்தருகீர்த்தியிராமானுச முனிதாளிணைமேல்
உயர்ந்தகுணத்துத் திருவரங்கத்த முதுஓங்குமன்பால்
இயம்பும்கலித்துறையந் தாதியோதவிசைநெஞ்சமே.

சொல்லின் தொகைகொண்டுஉனதடிப்போ துக்குத்தொண்டு செய்யும்
நல்லன்பரேத்துமுன் நாமமெல்லாமென் தன்நாவினுள்ளே
அல்லும்பகலுமமரும்படிநல்கு அறுசமயம்
வெல்லும்பரம இராமானுச இதென்விண்ணப்பமே.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

✡பூ மன்னுமாதுபொருந்தியமார்பன்✡
புகழ்மலிந்த
பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்✡
பல்கலையோர்
தாம்மன்னவந்தவிராமானுசன்
சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ✡
நெஞ்சேசொல்லுவோமவன்நாமங்களே 1

✡கள்ளார்பொழில்தென்னரங்கன்✡
கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளா மனிசரைநீங்கி✡
குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமானுசன்
மிக்கசீலமல்லால்
உள்ளதென்னெஞ்சு✡
ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே 2

பேரியல்நெஞ்சே அடிபணிந்தேனுன்னை✡
பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம்புலத்தி✡
பொருவரும்சீர்

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆரியன்செம்மை
இராமானுசமுனிக்கன்புசெய்யும்
சீரியபேறுடையார்✿
அடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே. 3

என்னைப்புவியில் ஒரு பொருளாக்கி✿
மருள்சுரந்த
முன்னைப்பழவினை வேரறுத்து✿
ஊழிமுதல்வனையே
பன்னப்பணித்தவிராமானுசன்
பரன்பாதமுமென்
சென்னித்தரிக்கவைத்தான்✿
எனக்கேதும்சிதைவில்லையே. 4

எனக்குற்றசெல்வமிராமானுசனென்று✿
இசையகில்லா
மனக்குற்றமாந்தர்பழிக்கில்புகழ்✿
அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன் திருநாமங்கள்
சாற்றும்என்பா
இனக்குற்றம்காணகில்லார்✿
பத்தியேய்ந்தவியல்விதென்றே. 5

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

இயலும்பொருளுமிசையத்தொடுத்து ✵
ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும் இராமானுசனை ✵
மதியின்மையால்
பயிலும்கவிகளில்பத்தியில்லாதவென்
பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் ✵
அவன்தன்பொருங்கீர்த்திமொழிந்திடவே 6

✵ மொழியைக்கடக்கும்பெரும்புகழான் ✵
வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும்
நம்கூரத்தாழ்வான் சரண்கூடியபின் ✵
பழியைக்கடத்துமிராமானுசன்
புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் ✵
எனக்கினியாதும்வருத்தமன்றே. 7

வருத்தும்புறவிருள்மாற்ற ✵
எம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின் பொருளையும்
செந்தமிழ்தன்னையும்கூட்டி ✵ ஒன்றத்

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திரித்தன்றெரித்ததிருவிளக்கைத்
தன்திருவுள்ளத்தே
இருந்தும்பரமன்✲
இராமானுசனெம்மிறையவனே. 8

இறைவனைக்காணும்
இதயத்திருள்கெட✲ ஞானமென்னும்
நிறைவிளைக்கேற்றியபூதத்திருவடிதாள்கள்✲
நெஞ்சத்
துறையவைத்தாளுமிராமனுசன்
புகழோதும்நல்லோர்
மறையினைக்காத்து✲
இந்தமண்ணகத்தேமன்னவைப்பவரே. 9

மன்னியபேரிருள்மாண்டபின்✲
கோவலுள்மாமலராள்
நன்னொடுமாயனைக்கண்டமைகாட்டும்✲
தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றும்
இராமானுசற்கன்புபூண்டவர்தான்
சென்னியில்சூடும்✲
திருவுடையாரென்றும்சீரியரே. 10

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சீரியநான்மறைச்செம்பொருள்✡
செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்✡
சரணாம்பதுமத்
தாரியல்சென்னியராமானுசன்தன்னைச்
சார்ந்தவர்தாம்
காரியவண்மை✡ என்னால்
சொல்லொணா திக்கடலிடத்தே 11

இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவன்✡
இணையடிப்போது
அடங்குமிதயத்திராமானுசன்✡
அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்
காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கே✡
அடியேனன்புசெய்வதுவே. 12

செய்யும்பசுந்துளபத்தொழில்மாலையும்
செந்தமிழில்
பெய்யும்மறைத்தமிழ்மாலையும்✡
பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும்

CC0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன்✡ இராமானுசன்சரணேகதி
வேறெனக்சே. 13

கதிக்குப்பதறி✡
வெங்கானமும்கல்லும்கடலுமெல்லாம்
கொதிக்கத்தவம் செய்யும் கொள்கையற்றேன்✡
கொல்லிகாவலன்சொல்
பதிக்கும்கலைக்கவிபாடும்
பெரியவர்பாதங்களே
துதிக்கும்பரமன்✡
இராமானுசனென்னைச்சோர்விலனே. 14

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால்✡
தொல்லைமாலையொன்றும்
பாராது அவனைப்பல்லாண்டென்றுகாப்பிடும்✡
பான்மையன்தாள்
பேராதவுள்ளத்திராமானுசன்தன்
பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேன்✡
எனக்கென்னதாழ்வினியே. 15

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

✡தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்து✡
தலமுழுதும்கலியே
ஆள்கின்றநாள்வந்து அளித்தவன்காண்மின்✡
அரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச்
சூடிக்கொடுத்தவள்தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல்✡
இராமானுசனென்னும் மாமுனியே. 16

முனியார்துயரங்கள்முந்திலும்✡
இன்பங்கள்மொய்த்திடினும்
கனியார்மனம்கண்ணமங்கைநின்றானை✡
கலைபரவும்
தனியானையைத்தண்டமிழ்செய்தநீலன்தனக்கு
உலகில்
இனியானை✡
எங்களிராமானுசனைவந்தெய்தினரே. 17

எய்தற்கரியமறைகளை✡
ஆயிரமின்தமிழால்
செய்தற்குலகில்வரும்சடகோபனை✡
சிந்தையுள்ளே

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெய்தற்கிசையும்
பெரியவர்சீரையுயிர்களெல்லாம்
உய்தற்குதவும்✵
இராமானுசனெம்முறுதுணையே. 18

உறுபெருஞ்செல்வமும்தந்தையும் தாயும்✵
உயர்குருவும்
வெறிதருபூமகள்நாதனும்✵
மாறன்விளங்கியசீர்
நெறிதரும்செந்தமிழாரணமே
யென்றிந்நீணிலத்தோர்
அறிதரநின்ற✵
இராமானுசனெனக்காரமுதே. 19

ஆரப்பொழில்தென்குருகைப்பிரான்✵
அமுதத்திருவாய்
ஈரத்தமிழினிசையுணர்ந்தோர்கட்கு✵
இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும்சீலங்கொள்நாதமுனியை
நெஞ்சால்
வாரிப்பருகும்✵
இராமானுசனென்தன்மாநிதியே. 20

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

நிதியைப்பொழியும்முகிலென்று❋
நீசதர்தம்வாசல்பற்றித்
துதிகற்றுலகில்துவள்கின்றிலேனினி❋
தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவன்
இணையடியாம்
கதிபெற்றுடைய❋
இராமானுசனென்னைக்காத்தனனே. 21

கார்த்திகையானும்கரிமுகத்தானும்❋
கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும்முதுகிட்டு❋
மூவுலகும்
பூத்தவனேயென்றுபோற்றிட
வாணன்பிறைபொறுத்த
தீர்த்தனையேத்தும்❋
இராமானுசனென்தன்சேமவைப்பே. 22

வைப்பாயவன்பொருளென்று❋
நல்லன்பர்மனத்தகத்தே
எப்போதும்வைக்குமிராமானுசனை❋
இருநிலத்தில்

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஒப்பாரிலாதவுறுவினையேன்
வஞ்சநெஞ்சில் வைத்து
முப்போதும்வாழ்த்துவன்✽
என்னாமதிதுஅவன்மொய்புகழ்க்கே. 23

மொய்த்தவெந்தீவினையால்
பல்லுடல்தொறும்மூத்து✽ அதனால்
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாம்✽
இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும்
புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து✽
இராமானுசனென்னும்கார்த்தன்னையே.24

காரேய்கருணையிராமானுச✽
இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்தன்மை✽
அல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான்
வந்துநீயென்னையுற்றபின்உன்
சீரேயுயிர்க்குயிராய்✽
அடியேற்கின்றுதித்திக்குமே. 25

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

திக்குற்றகீர்த்தியிராமானுசனை ✲
என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தை ✲
மேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பு
ஏதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பு ✲
அவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே.26

கொள்ளக்குறைவற்றிலங்கி ✲
கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால்
வல்வினையேன்மனம்நீபுகுந்தாய் ✲
வெள்ளைச்சுடர்விடுமுன்
பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கம் ✲
இராமானுசவென்தனிநெஞ்சமே. 27

நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்த
நிமலன் ✲ நாங்கள்
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன் ✲
பாதம்நண்ணா

CC0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வஞ்சர்க்கரியவிராமானுசன்
புகழன்றியென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது ✲
என்னவாழ்வின்றுகூடியதே. 28

கூட்டும்விதியின்று கூடுங்கொலோ ✲
தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னை ✲
தன்பத்தியென்னும்
வீட்டின்கண்வைத்தவிராமானுசன்
புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை ✲
என்நாட்டங்கள்கண்டின்பமெய்திடவே. 29

இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென் ✲
எண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென் ✲
தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன்
மாயனெனமொழிந்த
அன்பனைகன் ✲
இராமானுசனென்னையாண்டனனே. 30

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

✡ஆண்டுகள்நாள்திங்களாய்✡
நிகழ்காலமெல்லாம்மனமே
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோம்✡
இன்றோரெண்ணின்றியே
காண்தகுதோளண்ணல்
தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன்✡
இராமானுசனைப்பொருந்தினமே. 31

பொருந்தியதேசும்
பொறையும்திறலும்புகழும்✡நல்ல
திருந்தியஞானமும்
செல்வமும்சேரும்✡ செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால்
வந்தெடுத்தளித்த
அருந்தவன்✡
எங்களிராமானுசனையடைபவர்க்கே. 32

அடையார்கமலத்தலர்மகள்கேள்வன்✡
கையாழியென்னும்
படையோடுநாந்தகமும்படர்தாண்டும்✡
ஒண்சார்ங்கவில்லும்

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புடையார்புரிசங்கமுமிந்தப்
பூதலம்காப்பதற்கென்று
இடையே✽
இராமானுசமுனியாயினவிந்நிலத்தே. 33

நிலத்தைச்செறுத்துண்ணும்
நீசக்கலியை✽ நினைப்பரிய
பெலத்தைச்செறுத்தும்
பிறங்கியதில்லை✽என்பெய்வினைதென்
புலத்தில்பொறித்த
அப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்தது✽
இராமானுசன்தன்நயப்புகழே. 34

நயவேனோரு தெய்வம்நானிலத்தே✽
சிலமானிடத்தைப்
புயலேயென்கவிபோற்றிசெய்யேன்✽
பொன்னரகமென்னில்
மயலேபெருகுமிராமானுசன்
மன்னுமாமலர்த்தாள்
அயரேன்✽ அருவினையென்னை
எவ்வாறின்றடர்ப்பதுவே. 35

-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidik Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

அடல்கொண்டநேமியன்
ஆருயிர்நாதன் ✲ அன்றாரணச்சொல்
கடல்கொண்டவொண்பொருள்கண்டளிப்ப ✲
பின்னுங்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்
பொருள்கொண்டு அவர்பின்
படருங்குணன்
எம்மிராமானுசன்தன்படியிதுவே. 36

படிகொண்டகீர்த்தி
இராமாயணமென்னும்பத்திவெள்ளம் ✲
குடிகொண்ட கோயிலிராமானுசன்குணங்கூறும் ✲
அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள்
கலந்துள்ளங்கனியும்நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து ✲
என்னையுமாளவர்க்காக்கினரே. 37

ஆக்கியடிமைநிலைப்பித்தனை
யென்னையின்று ✲ அவமே
போக்கிப்புறத்திட்டது என்பொருளாமுன்பு ✲
புண்ணியர்தம்

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

வாக்கிற்பிரியாவிராமானுச
நின்னருளின்வண்ணம்
நோக்கில்தெரிவரிதால் ✲
உரையாயிந்தநுண்பொருளே. 38

பொருளும்புதல்வரும் பூமியும் ✲
பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும்நமக்குநெஞ்சே ✲
மற்றுளார்தரமோ
இருள்கொண்டவெந்துயர்மாற்றித்
தன்னீறில்பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து ✲
இராமானுசன்செய்யும்சேமங்களே. 39

சேமநல்வீடும் பொருளும்தருமமும் ✲
சீரியநற்
காமமும்என்றிவைநான்கென்பர் ✲
நான்கினும்கண்ணனுக்கே
ஆமதுகாமம்
அறம்பொருள்விடிதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலன் ✲
இராமானுசனிந்தமண்மிசையே. 40

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மண்மிசையோனிகள்தோறும்பிறந்து ✵
எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும்காணகில்லா ✵
உலகோர்களெல்லாம்
அண்ணலிராமானுசன்
வந்துதோன்றியவப்பொழுதே
நண்ணருஞானம்தலைக்கொண்டு ✵
நாரணற்காயினரே. 41

ஆயிழையார்கொங்கைதங்கும் ✵
அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியைவந்தெடுத்தானின்று ✵
மாமலராள்
நாயகனெல்லாவுயிர் கட்கும்நாதன் ✵
அரங்கனென்னும்
தூயவன் ✵
தீதிலிராமானுசன்தொல்லருள்சுரந்தே. 42

சுரக்கும் திருவுமுணர்வும் ✵
சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும் ✵
படியிலுள்ளீர்

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

உரைக்கின்றனனுமக்குயான்
அறஞ்சீறுமுறுகலியைத்
தூரக்கும்பெருமை ✲
இராமானுசனென்றுசொல்லுமினே. 43

சொல்லார்தமிழொருமூன்றும் ✲
சுருதிகள்நான்குமெல்லை
யில்லாவறநெறியாவும்தெரிந்தவன் ✲
எண்ணருஞ்சீர்
நல்லார்பரவுமிராமானுசன்
திருநாமம்நம்பிக்
கல்லாரகலிடத்தோர் ✲
எதுபேறென்றுகாமிப்பரே. 44

பேறொன்றுமற்றில்லைநின்சரணன்றி ✲
அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லைமற்றச்சரணன்றி ✲
என்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மை
சொல்லால்
கூறும்பரமன்று ✲
இராமானுசமெய்ம்மைகூறிடிலே. 45

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கூறும்சமயங்களாறும்குலைய ✲
குவலயத்தே
மாறன்பணித்தமறையுணர்ந்தோனை ✲
மதியிலியேன்
தேறும்படியென்மனம்புகுந்தானைத்
திசையனைத்தும்
ஏறும்குணனை ✲
இராமானுசனையிறைஞ்சினமே. 46

இறைஞ்சப்படும்பரன்ஈசனரங்கனென்று ✲
இவ்வுலகத்
தறம்செப்புமண்ணலிராமானுசன் ✲
என்னருவினையின்
திறம்செற்றிரவும்பகலும்
விடாதென்தன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் ✲
எனக்காரும்நிகரில்லையே. 47

நிகரின்றிநின்றவென்நீசதைக்கு ✲
நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்குமஃதேபுகல் ✲
புன்மையிலோர்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பகரும்பெருமையிராமானுச
இனிநாம்பழுதே
அகலும்பொருளென் ✻
பயனிருவோமுக்குமானபின்னே. 48

ஆனதுசெம்மையறநெறி ✻
பொய்ம்மையறுசமயம்
போதுபொன்றியிறந்ததுவெங்கலி ✻
பூங்கமலத்
தேனதிபாய்வயல்தென்னரங்கன்
கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னும் ✻
இராமானுசனித்தலத்துதித்தே. 49

உதிப்பனவுத்தமர்சிந்தையுள் ✻
ஒன்னலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திடமாறிநடப்பன ✻
கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென்புன்கவிப்பாவினம்
பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதன் ✻
இராமானுசன்தன்னிணையடியே. 50

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

aidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காய் ✡
அன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனை ✡
முழுதுணர்ந்த
அடியர்க்கமுதமிராமானுசன்
என்னையாளவந்து இப்
படியில்பிறந்தது ✡
மற்றல்லைகாரணம்பார்த்திடிலே. 51

பார்த்தானறுசமயங்கள்பதைப்ப ✡
இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு
புன்மையினேனிடைத்தான் புகுந்து ✡
தீர்த்தானிருவினைதீர்த்து
அரங்கன்செய்த்தாளிணையோடு
ஆர்த்தான் ✡ இவையெம்மிராமானுசன்
செய்யுமற்புதமே. 52

அற்புதன்செம்மையிராமானுசன் ✡
என்னையாளவந்தகற்பகம்
கற்றவர்காமுறுசீலன் ✡
கருதரிய

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
பற்பல்லுயிர்களும் பல்லுலகுயாவும்
பரனதென்னும்
நற்பொருள்தன்னை ❋
இந்நானிலத்தேவந்துநாட்டினனே. 53

நாட்டியநீசச்சமயங்கள்மாண்டன ❋
நாரணனைக்
காட்டியவேதம்களிப்புற்றது ❋
தென்குருகைவள்ளல்
வாட்டமிலாவண்தமிழ்மறைவாழ்ந்தது
மண்ணுலகில்
ஈட்டியசீலத்து ❋
இராமானுசன்தன்னியல்வுகண்டே. 54

கண்டவர்சிந்தைகவரும்
கடிபொழில்தென்னரங்கன் ❋
தொண்டர்குலாவுமிராமானுசனை ❋
தொகையிறந்த
பண்தருவேதங்கள்
பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழும் ❋
குடியாமெங்கள்கோக்குலமே. 55

CC0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கோக்குலமன்னரைமூவெழுகால்✵
ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப்போற்றும் புனிதன்✵
புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தியிராமானுசனை
அடைந்தபின் என்
வாக்குரையாது✵ என்மனம்
நினையாதினிமற்றொன்றையே. 56

மற்றொருபேறுமதியாது✵
அரங்கன்மலரடிக்கு ஆள்
உற்றவரேதனக்குற்றவராக்
கொள்ளுமுத்தமனை✵
நற்றவர்போற்றுமிராமானுசனை
இந்நானிலத்தே
பெற்றனன்✵ பெற்றபின்
மற்றறியேனொருபேதைமையே. 57

பேதையர்வேதப் பொருளிதென்றுன்னி✵
பிரமம்நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிருமஃதென்று✵
உயிர்கள்மெய்விட்டு

CC0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஆதிப்பரனோடொன்றாமென்று
சொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான்✡
எம்மிராமானுசன்மெய்ம்மதிகடலே. 58

கடலளவாயதிசையெட்டினுள்ளும்✡
கலியிருளே
மிடைதருகாலத்திராமானுசன்✡
மிக்கநான்மறையின்
சுடரொளியாலவ்விருளைத்
துரத்திலனேல் உயிரை
உடையவன்✡நாரணனென்றறிவாரில்லை
உற்றுணர்ந்தே. 59

உணர்ந்தமெய்ஞ்ஞானியர்யோகந்தொறும்✡
திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசைமன்னுமிடந்தொறும்✡
மாமலராள்
புணர்ந்தபொன்மார்வன்
பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல்✡
இராமானுசனெம்குலக்கொழுந்தே. 60.

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொழுந்துவிட்டோடிப்படரும்வெங்கோள்
வினையால் ✿ நிரயத்து
அழுத்தியிட்டேனைவந்தாட்கொண்டபின்னும் ✿
அருமுனிவர்
தொழுந்தவத்தோனெம்மிராமானுசன்
தொல்புகழ்சுடர்மிக்
கெழுந்தது ✿ அத்தால்
நல்லதிசயங்கண்டதிருநிலமே. 61

இருந்தேனிருவினைப்பாசம்கழற்றி ✿
இன்றுயானிறையும்
வருந்தேனினியெம்மிராமானுசன் ✿
மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்
கொன்றும்நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும் ✿
பெரியோர்தம்கழல்பிடித்தே. 62

பிடியைத்தொடரும்களிறென்ற ✿
யானுன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படிநல்கவேண்டும் ✿
அறுசமயச்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

செடியைத்தொடரும் மருள்செறிந்தோர்
சிதைந்தோடவந்து இப்
படியைத்தொடரும்✵
இராமானுசமிக்கபண்டிதனே. 63

பண்தரும்மாறன்பசுந்தமிழ்✵
ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிடஎங்களிராமானுசமுனிவேழம்✵
மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக்
குவலயத்தே
மண்டிவந்தேன்று✵
வாதியார்காளுங்கள்வாழ்வற்றதே. 64

வாழ்வற்றதுதொல்லைவாதியர்க்கு✵
என்றும்மறையவர்தம்
தாழவற்றது
தவம்தாரணிபெற்றது✵தத்துவநூல்
கூழற்றதுகுற்றமெல்லாம்
பதித்தகுணத்தினர்க்கு அந்
நாழற்றது✵
நம்மிராமானுசன்தந்தஞானத்திலே. 65

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
ஞானம்கனிந்தநலங்கொண்டு✡
நாடொறும்நைபவர்க்கு
வானம்கொடுப்பதுமாதவன்✡
வல்வினையேன்மனத்தில்
ஈனம்கடிந்தவிராமானுசன்தன்னை
யெய்தினர்க்கு அத்
தானம்கொடுப்பது✡
தன்தகவென்னும்சரண்கொடுத்தே. 66

சரணமடைந்ததருமனுக்கா✡
பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன்
தன்னைவணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென்றிராமானுசன்
உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல்✡
அரணார்மற்றிவ்வாருயிர்க்கே. 67

ஆரெனக்கின்றுநிகர்சொல்லில்✡
மாயனன்றைவர்தெய்வத்
தேரினில்செப்பியகீதையின் செம்மை✡
பொருள்தெரியப்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பாரினிற்சொன்னவிராமானுசனைப்
பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்து ✲
என்னாவியும்சிந்தையுமே. 68

சந்தையினோடுகரணங்கள்யாவும்சிந்தைந்து ✲
முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு ✲
அவையென்தனக்கன்றருளால்
தந்தவரங்கனுந்தன்சரண்தந்திலன்
தானதுதந்து ✲
எந்தையிராமானுசன்
வந்தெடுத்தனனின்றென்னையே. 69

என்னையும்பார்த்தென்னியல்வையும்பார்த்து ✲
எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில் அருள்செய்வதேநலம் ✲
அன்றியென்டால்
பின்னையும்பார்க்கில் நலமுளதே
உன்பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் ✲
இராமானுசவுன்னைச்சார்ந்தவரே. 70

CC0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

சார்ந்ததென்சிந்தையுன்தாளிணைக்கீழ் ✻
அன்பதான்மிகவும்
கூர்ந்து அத்தாமரைத்தாள்களுக்கு ✻
உன்தன்குணங்களுக்கே
தீர்த்ததென்செய்கைமுன்செய்வினை
நீசெய்வினையதனால்
பேர்ந்தது ✻ வண்மையிராமானுச
எம்பெருந்தகையே. 71

கைத்தனன்தீயசமயக்கலகரை ✻
காசினிக்கே
உய்த்தனன்தூயமறைநெறிதன்னை ✻
என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும்
நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை ✻
இராமானுசன்மிக்கவண்மைசெய்தே. 72

வண்மையினாலும் தன்மாதகவாலும் ✻
மதிபுரையும்
தண்மையினாலும் இத்தாரணியோர்கட்கு ✻
தான்சரணாய்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

உண்மைநன்ஞானமுரைத்த
இராமானுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை ✡
மற்றோர்நிலைதேர்ந்திடிலே. 73

தேரார்மறையின்திறமென்று ✡
மாயவன்தீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பது ✡
கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்மிராமானுசன்
அவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது ✡
அப்போதொருசிந்தைசெய்தே. 74

செய்த்தலைச்சங்கம்செழுமுத்தமீனும் ✡
திருவரங்கர்
கைத்தலத்தாழியும்சங்கமுமேந்தி ✡
நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னை
விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து ✡
இராமானுசவென்னை முற்றுநின்றே. 75

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

✽நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும்✽
நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும்
குலவியபாற்கடலும்✽
உன்தனக்கெத்தனையின்பந்தரும்
உன்னிணைமலர்த்தாள்
என்தனக்குமது✽
இராமானுச இவையீந்தருளே. 76

ஈந்தனனீயாதவின்னருள்✽
எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப்பல்பொருளால்✽
இப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினால்
என்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன்✽ வண்மை
இராமானுசற்கென்கருத்தினியே. 77

கருத்திற்குபுந்துள்ளில்கள்ளம் கழற்றி✽
கருதரிய
வருத்தத்தினால்மிகவஞ்சித்து✽
நீயிந்தமண்ணகத்தே

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின்
என்னெஞ்சில்
பொருத்தப்படாது✡ எம்மிராமானுச
மற்றோர்பொய்ப்பொருளே. 78

பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து✡
இந்தப்பூதத்தே
மெய்யைப்புரக்குமிராமானுசன்நிற்க✡
வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வமிங்கு
யாதென்றுலர்ந்து அவமே
ஐயப்படாநிற்பர்✡
வையத்துள்ளோர்நல்லறிவிழந்தே. 79

நல்லார்பரவுமிராமானுசன்✡
திருநாமம்நம்ப
வல்லார்திறத்தைமறவாதவர்கள்யவர்✡
அவர்க்கே
எல்லாவிடத்திலுமென்றுமெப்போதிலும்
எத்தொழும்பும்
சொல்லால்மனத்தால்✡ கருமத்தினால்
செய்வன்சோர்வின்றியே. 80

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai

சோர்வின்றியுன்தன்துணையடிக்கீழ் ✽
தொண்டுபட்டடவர்பால்
சார்வின்றிநின்றவெனக்கு ✽
அரங்கன்செய்தாளிணைகள்
பேர்வின்றியின்றுமெறுத்துமிராமானுச ✽
இனியுன்
சீரொன்றியகருணைக்கு ✽
இல்லைமாறுதெரிவுறிலே. 81

தெரிவுற்றஞானம்செறியப்பெறாது ✽
வெந்தீவினையால்
உருவற்றஞாலத்துழல்கின்றவென்னை ✽
ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றான்
என்னபுண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தி ✽
இராமானுசனென்னும்சிர்முகிலே. 82

சீர்கொண்டு பேரறம்செயது ✽
நல்வீடுசெறிவுமென்னும்
பார்கொண்டமேன்மையர்கூட்டனல்லேன் ✽
உன்பதயுகமாம்

CC0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஏர்கொண்டவீட்டையெளிதினிலெய்துவன்
உன்னுடைய
கார்கொண்டவண்ணம்✡
இராமானுசஇதுகண்டுகொள்ள. 83

கண்டுகொண்டனெம்மிராமானுசன்தன்னை✡
காண்டலுமே
தொண்டுகொண்டேன் அவன்தொண்டர்
பொற்றாளில்✡ என்தொல்லைவெந்நோய்
விண்டுகொண்டேனவன்சீர்வெள்ளவாரியை
வாய்மடுத்தின்று
உண்டுகொண்டேன்✡ இன்னமுற்றன
ஓதிலுலப்பில்லையே... 84

ஓதியவேதத்தினுட்பொருளாய்✡
அதனுச்சிமிக்க
சோதியை நாதானென்னவறியாது
உழல்கின்றதொண்டர்✡
பேதையைதீர்த்தவிராமானுசனைத்
தொழும்பெரியோர்
பாதமல்லாலென்தன்னாருயிர்க்கு✡
யாதொன்றும்பற்றில்லையே. 85

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

aidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

பற்றாமனிசரைப்பற்றி ❖
அப்பறுவிடாதவே
உற்றாரெனவுழன்று
ஓடிநையேனினி ❖ ஒள்ளியநூல்
கற்றார்பரவுமிராமானுசனைக்
கருதுமுள்ளம்
பெற்றார்யவர் ❖
அவரெம்மைநின்றாளும்பெரியவரே. 86

பெரியவர்பேசிலும்பேதையர்பேசிலும் ❖
தன்குணங்கட்கு
உரியசொல்லென்றுமுடையவனென்றென்று ❖
உணர்வில்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தியிராமானுசன்
மறைதேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் ❖
பொருந்தாதவரைப்பொரும்கலியே. 87

கலமிக்கசெந்நெல்கழனிக்குறையல் ❖
கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலையுண்டுதன்னுள்ளம்தடித்து ❖
அதனால்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வலிமிக்கசீயமிராமானுசன்
மறைவாதியராம்
புலிமிக்கதென்று✽ இப்புவனத்தில்
வந்தமைபோற்றுவனே. 88

போற்றரும்சீலத்திராமானுச✽
நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழவதுதீர்ல்✽
உன்சீர்தனக்கோர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலும்
என்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாது✽இதற்கென்னினைவாய்
என்றிட்டஞ்சுவனே. 89

நினையார்பிறவியைநீக்கும்பிரானை✽
இந்நீணிலத்தே
எனையாளவந்தவிராமானுசனை✽
இருங்கவிகள்
புனையார்புனையும் பெரியவர்தாள்களில்
பூந்தொடையல்
வனையார்✽ பிறப்பில்வருந்துவர்
மாந்தர்மருள்சுரந்தே. 90

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும்✿
அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்தவுலகிருள்நீங்க✿
தன்னீண்டியசீர்
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்கும்நாதன்
அரங்கனென்னும்
பொருள்சுரந்தான்✿
எம்மிராமானுசன்மிக்கபுண்ணியனே. 91

புண்ணியநோன்புபுரிந்துமிலேன்✿
அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்விநுவன்றுமிலேன்✿
செம்மைநூற்புலவர்க்
கொண்ணருங்கீர்த்தியிராமானுச
இன்றுநீபுகுந்துஎன்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும்✿
நின்றவிக்காரணம் கட்டுரையே. 92

கட்டப்பொருமைளமறைப்பொருளேன்று✿
கயவர்சொல்லும்
பெட்டைக்கொடுக்கும்பிரானல்லனே✿
என்பெருவினையைக்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிட்டிக்கழங்கொடு
தன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிகளைந்த ✡
இராமானுசனென்னும்மெய்தவனே. 93

தவந்தரும் செல்வம்தகவும் தரும் ✡
சலியாப்பிறவிப்
பவந்தரும் தீவினைபாற்றித்தரும்
பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலிராமானுசன்தன்னைச்
சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் ✡ அவன்சீரன்றி
யானொன்றுமுள்மகிழ்ந்தே. 94

உண்ணின்றுயிர்களுக்குற்றனவேசெய்து ✡
அவர்க்குயவே
பண்ணும்பரனும் பரிவிலனாம்படி ✡
பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்று
வீடளிப்பானெம்மிராமானுசன்
மண்ணின்தலத்துதித்து ✡
உய்மறைநாலும்வளர்த்தனனே. 95

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

 Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

மருள்சுரந்து ஆகமவாதியர்கூறும்✡
. அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்தவுலகிருள்நீங்க✡
தன்னீண்டியசீர்
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்கும்நாதன்
அரங்கனென்னும்
பொருள்சுரந்தான்✡
எம்மிராமானுசன்மிக்கபுண்ணியனே. 91

புண்ணியநோன்புபுரிந்துமிலேன்✡
அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்விநுவன்றுமிலேன்✡
செம்மைநூற்புலவர்க்
கொண்ணருங்கீர்த்தியிராமானுச
இன்றுநீபுகுந்துஎன்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும்✡
நின்றவிக்காரணம் கட்டுரையே. 92

கட்டப்பொருமைளமறைப்பொருளேன்று✡
கயவர்சொல்லும்
பெட்டைக்கொடுக்கும்பிரானல்லனே✡
என்பெருவினையைக்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கிட்டிக்கழங்கொடு
தன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிகளைந்த ✲
இராமானுசனென்னும்மெய்தவனே. 93

தவந்தரும் செல்வம்தகவும் தரும் ✲
சலியாப்பிறவிப்
பவந்தரும் தீவினைபாற்றித்தரும்
பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலிராமானுசன்தன்னைச்
சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் ✲ அவன்சீரன்றி
யானொன்றுமுள்மகிழ்ந்தே. 94

உண்ணின்றுயிர்களுக்குற்றனவேசெய்து ✲
அவர்க்குயவே
பண்ணும்பரனும் பரிவிலனாம்படி ✲
பல்லுயிர்க்கும்
விண்ணின்தலைநின்று
வீடளிப்பானெம்மிராமானுசன்
மண்ணின்தலத்துதித்து ✲
உய்மறைநாலும்வளர்த்தனனே. 95

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

aidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

வளரும்பிணிகொண்டவல்வினையால்✵
மிக்கநல்வினையில்
கிளரும்துணிவுகிடைத்தறியாது✵
முடைத்தலையூன்
தளருமளவும்தரித்தும்விழுந்தும்
தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர்✵
இராமானுசன் தன்னையுற்றவரே. 96

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர்✵
மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய என்னையுற்றானின்று✵
தன்தகவால்
தன்னையுற்றாரன்றித்
தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை✵
இராமானுசன்குணம்சாற்றிடுமே. 97

✵இடுமேனியியசுவர்க்கத்தில்✵
இன்னம்நரகிலிட்டுச்
சுடுமே அவற்றைத் தொடர்தருதொல்லை✵
சுழல்பிறப்பில்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

நடுமேயினிநம்மிராமானுசன்
நம்மைநம்வசத்தே
விடுமேசரணமென்றால்
மனமேநையல்மேவுதற்கே. 98

தற்கச்சமணரும் சாக்கியப்பேய்களும்
தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும்சூனியவாதரும்
நான்மறையும்
நிற்கக்குறும்புசெய்
நீசரும்மாண்டனர்நீணிலத்தே
பொற்கற்பகம்
எம்மிராமானுசமுனிபோந்தபின்னே. 99

போந்ததென்னெஞ்சென்னும் பொன்வண்டு
உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண்டமர்ந்திடவேண்டி
நின்பாலதுவே
ஈந்திடவேண்டுமிராமானுச
இதுவன்றியொன்றும்
மாந்தகில்லாது
இனிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே. 100

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மயக்குமிருவினைவல்லியில் பூண்டு ❋
மதிமயங்கித்
துயக்கும்பிறவியில்தோன்றியவென்னை ❋
துயரகற்றி
உயக்கொண்டுநல்குமிராமானுச
என்றதுன்னையுன்னி
நயக்குமவர்க்கிதிழுக்கென்பர் ❋
நல்லவரென்றுநைந்தே. 101

ஞையும்மனமுன்குணங்களையுன்னி ❋
எந்நாவிருந்தெம்
ஐயனிராமானுசனென்றழைக்கும் ❋
அருவினையேன்
கையும்தொழும் கண்
கருதிடுங்காணக்கடல்புடைசூழ்
வையமிதனில் ❋ உன்வண்மை
என்பாலென்வளர்ந்ததுவே. 102

வளர்ந்தவெங்கோபமடங்கலொன்றாய் ❋
அன்றுவாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன் ❋
கீர்த்திப்பயிரெழுந்து

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

விளைந்திடும்சிந்தையிராமானுசன்
என்தன்மெய்வினைநோய்
களைந்துநன்ஞானமளித்தனன்✡
கையில்கனியென்னவே. 103

கையில்கனியென்னக்கண்ணனைக்
காட்டித்தரிலும்✡ உன்தன்
மெய்யிற்பிறங்கியசீரன்றிவேண்டிலன்யான்✡
நிரயத்
தொய்யில்கிடக்கிலும்
சோதிவிண்சேரிலும் இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன்✡ இராமானுச
என்செழுங்கொண்டலே. 104

செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன்✡
திருவடிக்கீழ்
விழந்திருப்பார்நெஞ்சில்மேவுநன்ஞானி✡
நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாதனிராமானுசனைத்
தொழும்பெரியார்
எழுந்திரைத்தாடுமிடும்✡
அடியேனுக்கிருப்பிடமே. 105

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

aidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

✲இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம்✲
மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோர்✲
அவைதன்னொடும்வந்
திருப்பிடம்மாயனிராமானுசன்மனத்து
இன்றவன்வந்
திருப்பிடம்✲ என்தனிதயத்துள்ளே
தனக்கின்புறவே. 106

இன்புற்றசீலத்திராமானுச✲
என்றுமெவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும் பிறந்திறந்து✲
எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவதொன்றுண்டு
உன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி✲
என்னையாக்கியங்காட்படுத்ததே. 107

✲அங்கயல்பாய்வயல்தென்னரங்கன்✲
அணியாகமன்னும்
பங்கயமாமலர்பாவையைப் போற்றுதும்✲
பத்தியெல்லாம்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acac

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தங்கியதென்னத்தழைத்து
நெஞ்சேநம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி✡
இராமானுசனடிப்பூமன்னவே. 108

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.
இராமானுச நூற்றந்தாதி முற்றிற்று.

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenn

ஸ்ரீ இராமானுஜரின் பிற திருநாமங்களும் அவற்றினை சூட்டியவர்களும்

திருநாமம்	சூட்டியவர்கள்
1. இளையபெருமாள் (அ) இலட்சுமணம்	திருமலை நம்பி
2. இராமானுஜர்	ஸ்ரீ சைலபூர்ணர்
3. இளையாழ்வார்	ஸ்ரீ சைலபூர்ணர்
4. எதிராஜர்	காஞ்சி வரதராஜப் பெருமாள்
5. உடையவர்	திருவரங்கத்து அரங்கன்
6. எம்பெருமானார்	திருகோட்டியூர் நம்பி
7. ஸ்ரீ பாஷ்யகாரர்	கலைமகள்
8. நம்கோயில் அன்னர்	ஸ்ரீ ஆண்டாள்

In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection: Sholinganallur, Chennai

ஸ்ரீ இராமானுஜரின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகள் :

1. அவதரித்த நாள் :	கி.பி. 1017 (சக.939)
2. யாதவ பிரகாசரில் சீடராக சேர்ந்த நாள் :	கி.பி. 1033
3. யமுனாசாரியாரை (ஆளவந்தாரை) சந்திக்கும் பொருட்டு திருவரங்கத்திற்கு விஜயம் செய்தது	கி.பி. 1042
4. இராமானுஜர் சந்நியாசம் பெற்றது	கி.பி. 1049
5. திருநாராயணபுரத்தில் நாராயணப் பெருமானை பிரதிஷ்டை செய்தது	கி.பி.1100
6. ஸ்ரீ இராமானுஜர் திருநாட்டுக்கு எழுந்தருளியது	கி.பி. 1137(சக.1059)

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acad

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ எதிராஜ ஸப்ததியில்

ஸ்ரீ பாஷ்யகாரரின் திருமேனி வர்ணனை :

உபவீதிந மூர்த்வ புண்ட்வந்தம்
த்ரிஜதக் புண்யபலம் த்ரிதண்ட ஹஸ்தம்|
சரணாகத ஸார்த்தவாஹமீடே
சிகயா சேகரிணம் பதிம் யதீநாம் ||
11

யஜ்ஞோபவீதத்தை தரித்திருப்பவரும், திருமண் காப்பு அணிந்துள்ளவரும், மூவுலக மக்கள் செய்த புண்ணியத்தின் பயன் போன்றவரும் முக்கோலக் கையிலேந்தியிருப்பவரும், சரணாகதர்களை ரக்ஷிப்பவருமான யதிகளுக்கு நாயகரான உடையவரை ஸ்தோத்திரம் செய்கிறேன்.

யஜ்ஞோபவீதம், சிகை, த்ரிதண்டம், ஊர்த்வ புண்ட்ரம் என்பவற்றைப் பிறமதத்தினர் துறவறம் பூண்டால் விட்டொழிப்பர், ஆனால் ஸ்ரீ பாஷ்யகாரர் தமது ஸந்யாஸ தர்மங்கள் அனைத்தையும்,செய்து வந்தமையால் யஜ்ஞோபவீதம் முதலியவற்றை ஸ்வாமி தேசிகன் சிறப்பாகப் புகழ்ந்துள்ளார்.

.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chenna

0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Acade

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ மதே ஸ்ரீவேதாந்த மஹா தேசிகாய நமஹ



In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy